**Dated : 26.03.2026**

**C.O.S. No. 2/2023**

**DW.1 – திரு. மணி**

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

நான் பதிலுரையில் தனியார் பள்ளியில் ஆசிரியராக பணிபுரிவதாக சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான். நான் M.A. தமிழ், M.Phil. B.Ed., படித்துள்ளேன். எத்தனை வருட காலமாக ஆசிரியராக பணியாற்றுகிறேன் என்றால் 25 வருட காலமாக பணியாற்றி வருகிறேன். என்னுடைய மாத வருமானம் எவ்வளவு என்றால் ரூ.30,000/– லிருந்து ரூ.35,000/– வரை. கொரோனாவிற்கு பின்னிட்டு தான் இந்த சம்பளம் கொடுக்கப்பட்டது. கொரோனாவிற்கு முன்னர் ரூ.27,000/– வழங்கப்பட்டது. இதை தவிர எனக்கு தனிப்பட்ட வருமானம் உள்ளதா என்றால் மாடு வைத்திருக்கிறேன், விவசாயம் செய்கிறேன். வாதி விஜயராம் கட்டுமான தொழிலில் 10 ஆண்டு காலமாக இருக்கிறார் என்று தான், அவரிடம் ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொண்டேன் என்றால் சரிதான். நான் அந்த ஒப்பந்தத்தில் என் முழு மனதுடன் தான் கையொப்பமிட்டேன், யாருடைய வற்புறுத்தலின் பேரிலும் கையொப்பமிடவில்லை என்றால் வற்புறுத்தலின் பேரில் படிக்கவிடாமல் இரவு 7.00 மணியளவில் கையொப்பம் வாங்கி கொண்டார். நான் ஆசிரியர் என்னும் நிலையில் ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொண்டால், படித்து பார்த்து கையெழுத்திட வேண்டும் என்றால் தெரியும், நம்பிக்கையின் பேரில் படித்து பார்க்காமல் கையொப்பமிட்டேன்.

இதற்கு முந்தைய தேதியில் வற்புறுத்தலின் பேரில் கையொப்பமிட்டேன் என்று கூறிய நிலையில், நம்பிக்கையின் பேரில் கையொப்பமிட்டேன் என்று கூறுகிறேன் எது உண்மை என்றால் நம்பிக்கையின் பேரில் தான் கையொப்பமிட்டேன். நான் அந்த ஒப்பந்தத்தில் கண்டுள்ள விவரங்களை ஒப்புக்கொண்டு தான் கையொப்பமிட்டேன் என்று அந்த ஆவணத்தில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் இல்லை. சாட்சி தாமே கூறுகிறார், ஒப்பந்த ஆவணம் என்பது ஒரு கண் துடைப்பிற்காக போடுவது, நீங்கள் எப்படி கேட்கிறீர்களோ நான் அது போல செய்து தருகிறேன் என்று கூறினார். ஆரம்பத்தில் தரை தளம் கட்டுவதற்காக மட்டுமே ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது என்றால் சரிதான். அதன் மதிப்பு ரூ.24,33,000/– என்று சொன்னால் உண்மை தான். ஒப்பந்தத்தில் காணப்படாத வேறு பணிகளையும் செய்து தருவதாகவும், அதற்குண்டான கூடுதல் பணத்தினை தருவதாகவும் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் தரை தளத்திற்கு மட்டும் தான் அந்த விவரம் குறிப்பிடப்பட்டுள்ளது.

Ex.A1ல் 4வது பக்கத்தில் கடைசி வரியில் கூடுதலான பணிகள் குறித்த விவரங்கள் தமிழில் குறிப்பிடப்பட்டுள்ளது, அதன் கீழ் உள்ள கையொப்பம் என்னுடையது தான் என்றால் சரிதான், சாட்சி தாமே கூறுகிறார் தரை தளத்திற்கு மட்டும் தான் அந்த கையொப்பமிட்டேன். 4 கேள்விகளுக்கு முன்னர் தான் இந்த ஒப்பந்தம் என்பது பெயரளவிற்கு தான் என்று நீங்கள் குறிப்பிடும் செயல்களை நான் செய்து தருகிறேன் என்று வாதி ஒப்புக்கொண்டதாக நீதிமன்றத்தின் முன்னிலையில் தெரிவித்தீர்கள் என்றால் தரை தளத்திற்கு மட்டும் தான் ஒப்புக்கொண்டேன். முதல் தளம் கட்டுவதற்கு இருவரும் வாய்மொழியாக ஒப்புக்கொண்டோம் என்றால் இல்லை. நான் இல்லை என்று மறுக்கும் நிலையில் எதற்காக அவருக்கு கூடும் பணம் கொடுத்தீர்கள் என்றால் மேல் தளம் கட்டுவதற்கு எவ்வளவு ஆகும் என்று கேட்டேன், ரூ.5,00,000/- கொடுங்கள் முடித்து கொடுத்துவிடுகிறேன் என்று கூறினார், நான் ஒரு முறை ரூ,2,00,000/-மும், மற்றொரு முறை ரூ.3,00,000/-மும் கொடுத்துவிட்டேன். மேல் தளம் கட்டுவதற்கு ரூ.5,00,000/- கொடுத்தால் கட்டிக்கொடுப்பதாக ஏற்படுத்திய ஒப்பந்தம் எந்த தேதியில் ஏற்பட்டது என்றால் தேதி நினைவில்லை.

நான் தாக்கல் செய்திருக்கும் ஆவணத்தில் Ex.B1 ஆவணத்தில் 6வது பக்கத்தில் பணம் கொடுத்தது, பெற்றுக்கொண்டது சம்மந்தமான விவரங்கள் பதியப்பட்டிருக்கிறது என்றால் பதியப்பட்டுள்ளது. இந்த ஆவணம் உண்மை ஆவணத்தினுடைய நகல் தான் என்றால் சரிதான். நகல் எடுக்கும் போது கொடுக்கப்பட்ட பணத்திற்குண்டான வரிசை எண்கள் பாதியாக துண்டிக்கப்பட்டு காணப்படுகிறது என்றால் உண்மை தான், செல்போனிலிருந்து எடுத்த நகலாகும். சாட்சி தாமே கூறுகிறார் உண்மை நகல் அவரிடம் உள்ளது. அந்த 6வது பக்கத்தினை தவிர மீதியுள்ள அனைத்து பக்கங்களுமே தெளிவாக விவரம் காணப்படுகிறது என்றால் அதை பற்றிய விவரம் தெரியவில்லை. என்னிடம் தற்போது காட்டப்படும் Ex.B1-ல் முதல் 5 பக்கங்கள் தெளிவாக விவரங்கள் அறியும் பொருட்டு காணப்படுகிறது என்றால் சரிதான். இதன் 6வது பக்கத்தில் மட்டும் 1லிருந்து 11வது Payment வரை சின்ன அளவில் காணப்படுகிறது, 12வது வரிசை எண்ணாக காட்டப்பட்டது மட்டும் தெளிவாக விவரம் காணப்படுகிறது என்றால் உண்மை தான், Engineer தனக்கு உடல் நிலை சரியில்லாமல் உள்ளது என்று சொன்னதால் 12வது காலத்தை மட்டும் என்னை எழுத சொன்னார்.

1 முதல் 11 வரையிலான பணம் கொடுக்கப்பட்டதற்கான தவணை விவரங்கள் மட்டும் தான் உண்மையானது, அதற்கு பின்னிட்டு எழுதப்பட்ட 12வது எண்ணாக காட்டி அதில் எழுதப்பட்ட விவரங்கள் எல்லாம் ஒரிஜினல் ஆவணத்தில் காணப்படவில்லை, பின்னிட்டு சேர்க்கப்பட்டிருக்கிறது என்று

சொன்னால் இல்லை. ரூ.2,00,000/– பின்னிட்டு ஒரு ரூ.3,00,000/– கொடுத்ததாக சொல்லியிருக்கிறேன், அது முதல் தளத்திற்கு தானே என்றால் ஆமாம். அந்த தொகையினை நான் எந்த தேதியில் கொடுத்தேன் என்றால் எனக்கு நினைவில்லை. பணம் கொடுக்கப்பட்ட விவரங்கள் அடங்கிய தாளில் 1 முதல் 11 வரையிலான விவரங்களில் அதில் அவருடைய சுருக்கொப்பம் போடப்பட்டு தேதிகளும் முறையாக காட்டப்பட்டிருக்கிறது என்றால் சரிதான். 1 முதல் 11 வரையிலான தவணை விவரங்களை எழுதியது வாதி தான், 12வதாக உள்ள எழுத்து மற்றும் அதற்கு கீழான கையொப்பமும் என்னுடையது என்றால் என்னுடைய கையொப்பமும் உள்ளது, அவருடைய கையொப்பமும் உள்ளது.

முதல் தளத்திற்கு ரூ.5,00,000/– கொடுத்ததாக சொல்லியிருக்கிறேன், அதற்கு முன்னால் நான் எவ்வளவு தொகை கொடுத்திருக்கிறேன் என்றால் சரியாக நினைவில்லை, பார்த்து தான் சொல்ல முடியும். தரை தளத்திற்கு கொடுக்கப்பட்ட தவணைகள் முறையே ரூ.1,50,000/–, 2வது ரூ.1,80,000/–, 3வது ரூ.1,50,000/–, 4வது ரூ.1,05,000/–, 5வது ரூ.1,50,000/–, 6வது ரூ.3,50,000/– கொடுக்கப்பட்டிருக்கிறது. அதற்கு பின்னிட்டு என்னால் கொடுக்கப்பட்ட தொகைகள் அனைத்துமே முதல் தளத்திற்காக கொடுக்கப்பட்ட தொகைகள் என்றால் இல்லை, தரை தளத்திற்குண்டானது தான், மற்றும் கையில் வாங்கிய ரூ.5,00,000/–ஐ அவர் கணக்கில் எழுதவில்லை. இந்த ரூ.5,00,000/– எதற்காக கொடுக்கப்பட்டது என்றால் அது தரை தளத்திற்காக கொடுக்கப்பட்டது. எந்த தேதியில் கொடுக்கப்பட்டது என்றால் தேதி எனக்கு ஞாபகமில்லை. அப்படியாயின் உண்மையிலேயே நான் தொகை கொடுக்கவில்லை, அவ்வாறு கொடுத்திருந்தால் எனக்கு தேதி ஞாபகம் இருந்திருக்கும் என்றால் 5 ஆண்டு காலம் ஆகிவிட்ட காரணத்தினால் நினைவிற்கு வரவில்லை. ரூ.3,00,000/– மற்றும் ரூ.2,00,000/– எனக்கு எப்படி ஞாபகம் இருக்கிறது என்றால் பணம் கொடுத்ததால் ஞாபகம் உள்ளது.

நான் குறிப்பிடுகின்ற தொகை ரூ.3,00,000/– மற்றும் ரூ.2,00,000/–மும் 7 மற்றும் 8வது தொகையாக காட்டப்பட்டிருக்கிறது என்றால் அது உண்மை தான். அந்த கையெழுத்து போடப்பட்ட நாள் 13.06.2020 என்று காட்டப்பட்டிருக்கிறது அது சரிதானா என்றால் அந்த தேதி சரிதான், அவருடைய வேலையாட்களிடமும் பணம் கொடுத்தனுப்ப சொல்வார், பணம் அவர்கள் மூலமாக கொடுத்தனுப்புவேன், பின்னிட்டு அதை கணக்கில் ஏற்றிக்கொள்வார், ஒரு சில நேரங்களில் அவரிடமும் ஒப்பந்தம் இருக்கும் என்னிடமும் ஒப்பந்தம் இருக்கும், ஒரே ஒப்பந்தம் தான், வேறு நகல்கள் எதுவும் கிடையாது. வேலையாட்கள் மூலமாக கொடுக்கப்பட்ட தொகைகளும் இதில் குறிப்பிடப்பட்டிருக்கிறதா

என்றால் ரூ.5,00,000/– மட்டும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. 10 மற்றும் 11 தவணை தொகையானது ரூ.1,48,800/– மற்றும் ரூ.2,17,000/– என்றால் சரிதான். காதணி விழாவிற்கு ஆடு வெட்டுவதற்காக என்னை பணம் கொடுக்க சொன்னார், அதையும் கணக்கில் வைத்துக்கொள்ளலாம் என கூறினார். அதில் குறிப்பிட்டிருக்கும் தேதி 10.06.2021 என்று சொன்னால் சரிதான்.

10.06.2021 வரை எங்களுக்குள் சுமூகமான உறவு தான் இருந்து வந்தது என்றால் சரியல்ல. அன்றைய தேதியில் எங்கள் வீட்டின் முதல் தளம் கட்டி முடிக்கப்பட்டுவிட்டது என்றால் எனக்கு நினைவில்லை. என் வீட்டை வாதி எந்த நிலை வரை கட்டியிருந்தார் என்றால் தரை தளம் கட்டிமுடித்து, மேல் தளத்தில் 2 அறைகள் போடப்பட்டு பூச்சு வேலை செய்யப்பட்டிருந்தது. பூச்சு வேலைக்கு பின்னிட்டு பெயிண்டிங் பணி தான் மேற்கொள்ள வேண்டும் என்றால் இல்லை. Electrical வேலை முடியவில்லை, பிளம்பிங் வேலை முடியவில்லை, முதல் தளமும், தரை தளமும் பூச்சு வேலை முடிக்கப்பட்டிருந்தது. அதற்கு மேல் Electrical வேலை, பிளம்பிங் வேலையும் நிலுவையில் இருந்ததாக நான் கூறுகிறேனா என்றால் ஆமாம். தற்போது என்னிடம் காட்டப்படுவது Electrical Bill–க்கான Estimate என்றால் சரிதான். இந்த ஆவணத்தில் பணம் கொடுக்கப்பட்டதாக சீல் எதுவும் போடப்படவில்லை என்று சொன்னால் போடவில்லை.

என்னிடம் தற்போது காணப்படும் ரசீது பைப்லைனுக்கான ரசீதா என்றால் இல்லை, பாத்ரூமிற்கு போடப்பட்ட டைல்ஸ்க்கான ரசீது. இதை தவிர வேறு எந்த பில்லும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் வாசகாலுக்கான பில் தாக்கல் செய்யவில்லை, கதவுகளுக்கான பில்லும் தாக்கல் செய்யவில்லை. இந்த பில்கள் எதிலுமே பணம் செலுத்தப்பட்டது என்ற முத்திரை காணப்படவில்லை, இது Estimate மட்டுமே என்று சொன்னால் பணம் கொடுத்ததற்கான ரசீது தான். நீங்கள் பணம் செலுத்தினீர்கள் என்ற முத்திரை அந்த பில்லில் காணப்படவில்லை என்றால் பில்லில் போடப்படவில்லை. உண்மையிலேயே பணம் கொடுத்து தான் பொருட்கள் பெறப்பட்டிருந்தால், பணம் பெறப்பட்டது என்ற முத்திரையை பதித்து தான் பொருட்களை கொடுத்திருப்பார்கள் என்றால் பணம் கொடுத்து வாங்கிய பிறகு தான் பில்லை கொடுத்தார்கள், பொருட்களையும் கொடுத்தார்கள். அதுபோல தரமாட்டார்கள், நான் வழக்கிற்காக கூறுகிறேன் என்றால் உண்மையை தான் கூறுகிறேன்.

பில்லில் குறிப்பிட்ட பொருட்கள் தவிர வேறு ஏதேனும் பொருட்கள் வாங்கினேனா என்றால் தரைக்கு கிரானைட் வாங்கினேன், படிக்கட்டிற்கு கிரானைட் வாங்கினேன், அவர் அமைத்து தந்த வாசக்கால் சரியில்லை உடைந்து போனது, வேங்கை மரத்தை மொத்தமாக வாங்கி மாற்றினேன், அவர் அமைத்த ஜென்னல் கம்பிகள் துருப்பிடித்திருந்தது அதையும் மாற்றினேன். நான் தற்போது விவரித்த மொத்த பொருட்களுக்கான செலவுகள் எவ்வளவு என்றால் எழுதி வைத்துள்ளேன், பார்த்து தான் சொல்ல முடியும். தோராயமாக ஒரு மதிப்பை சொல்லுங்கள் என்றால் தவறாகிவிடும் பார்த்து சொல்கிறேன். அந்த பொருட்களுக்கான பில் என்னிடம் உள்ளதா என்றால் பில் இல்லை. முன்னர் கேட்ட கேள்விக்கு பார்த்து சொல்கிறேன் என்று சொன்னேன், எதை பார்த்து சொல்ல வேண்டும் என்றால் நான் எவ்வளவு பொருட்கள் வாங்கினேன் என்பதற்கு என்னுடைய தனிப்பட்ட டைரில் குறித்து வைத்துள்ளேன், அதை பார்த்து சொல்வதாக கூறினேன்.

நான் பொருட்கள் வாங்கி சென்றதற்கு என்னுடைய தனிப்பட்ட டைரியில் கையெழுத்து போட்டுக்கொடுத்தாரா என்றால் இல்லை. டைரியில் எழுதிவைத்ததாக சொல்லும் விவரம் நானாக எழுதி வைத்திருக்கிறேன் என்றால் ஆமாம். நான் ஏற்கனவே விவரித்த செலவுகள் தவிர வேறு ஏதேனும் செலவுகள் மேற்கொண்டேனா என்றால் யோசித்து தான் சொல்ல வேண்டும். நான் தற்போது எங்கு தங்கியிருக்கிறேன் என்றால் புதிதாக கட்டப்பட்ட வீட்டில் தான் தங்கியிருக்கிறேன், கடந்த 6 மாத காலங்களாக அங்கு தங்கியிருக்கிறேன்.

**வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

Taken down by me in open Court interpreted/read to the witness and acknowledged by him/her to be correct.

LATHA V R Digitally signed by LATHA V R

Principal District Judge,
Krishnagiri.